This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores

# 7 இயல்

# பிரித்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்

## பொருளடக்கம்

7.1. நெறிமுறை குறியீட்டு முறைகள்
- 7.1.1. நிரலாக்க மொழி
- 7.1.2. போலிக் குறிமுறை
- 7.1.3. பாய்வுப் படங்கள்

7.2. ஒருங்கிணைப்பு
- 7.2.1. தொடர் கூற்றுகள்
- 7.2.2. தேர்ந்தெடுப்பு கூற்றுகள்
- 7.2.3. Case பகுப்பாய்வு
- 7.2.4. சுழற்சிக் கூற்று

7.3. பிரிப்பு
- 7.3.1. மெருகேற்றம்
- 7.3.2. செயற்கூறு



order@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



# மதிப்பாய்வு

## பகுதி - அ

**சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. மதிப்பிருத்தலுக்கு முன், u, v = 5, 10 எனில், கொடுக்கப்பட்டுள்ள தொடர் மதிப்பிருத்தலுக்கு பின், u மற்றும் v மாறிகள் பெறும் மதிப்பு என்ன?**

1 u := v

2 v := u

அ. u, v = 5 ,5 ஆ. u, v = 10, 5

இ. u, v = 5, 10 ஈ. u, v = 10 ,10

**[விடை: அ. u, v = 5 ,5]**

**2. மதிப்பிருத்தலுக்கு பிறகு, வரிசை எண் 3க்கான கீழ்கண்ட எந்த பண்புக்கூறு மெய்?**

1 -- i+j = 0

2 i, j := i+1, j-1

3 -- ?

அ. i + j > 0 ஆ. i + j < 0

இ. i + j = 0 ஈ. i = j

**[விடை: இ. i + j = 0]**

**3. C1 என்பது பொய் மற்றும் C2 என்பது மெய் எனில், இயக்கப்படும் கூட்டு கூற்று எது?** [மார்ச் 2019]

1 if C1

2 S1

3 else

4 if C2

5 S2

6 else

7 S3

அ. S1 ஆ. S2 இ. S3

ஈ. இவற்றில் ஏதுமில்லை **[விடை: ஆ. S2]**

**4. மடக்கிற்கு முன்னர், C பொய் எனில், கட்டுப்பாட்டு பாய்வு எதன் வழியும் இயங்கும்?**

1 S1

2 while C

3 S2

4 S3

அ. S1 ; S3

ஆ. S1 ; S2 ; S3

இ. S1 ; S2 ; S2 ; S3

ஈ. S1 ; S2 ; S2 ; S2 ; S3 **[விடை: அ. S1 ; S3]**

**5. C மெய் எனில், கொடுக்கப்பட்ட பாய்வு படங்கள் இரண்டிலும், S1 இயங்கும் ஆனால், S2 எதில் இயங்கும்?**




(1) (2)

அ. 1ல் மட்டும்

ஆ. 2ல் மட்டும்

இ. 1 மற்றும் 2

ஈ. 1ம் இல்லை 2ம் இல்லை

**[விடை: ஈ. 1ம் இல்லை 2ம் இல்லை.]**

**6. கீழ்காணும் மடக்கு எத்தனை முறை இயங்கும்?** **[ஜூன் 2019 ; QY. 2019]**

i := 0

while i≠5

i := i + 1

அ. 4 ஆ. 5 இ. 6 ஈ. 0

**[விடை. ஆ. 5]**

## பகுதி - ஆ

**குறு வினாக்கள்.**

**1. ஒரு நிபந்தனை மற்றும் கூற்று - வேறுபடுத்துக.** [அ.மா.வி 18]

**நிபந்தனை** : ஒரு நிலையை சோதிப்பதற்கான ஒரு சொற்றொடர் நிபந்தனை ஆகும்.

**கூற்று** : கணிப்பொறி ஒரு பணியை செய்வதற்காக கொடுக்கப்படும் கட்டளைகள் அடங்கிய ஒரு சொற்றொடர் "கூற்று" எனப்படும்.

**2. நிபந்தனைக் கூற்றுக்கு ஒரு பாய்வுப் படம் வரைக.**




order@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



**3. நிபந்தனைக் கூற்று மற்றும் சுழற்சிக் கூற்று இரண்டுமே, ஒரு நிபந்தனை மற்றும் செயல்படு கூற்றை பெற்றிருக்கிறது எனில், அவை எவ்வாறு வேறுபடுகிறது?**

**நிபந்தனை கூற்று :** நிபந்தனை மதிப்பு மெய் எண் இருக்கும் நிலையில் மட்டுமே சில கூற்றுகளை செயலாக்கம் செய்ய முடியும். நிபந்தனையின் மதிப்பு பொய் என இருக்கும்போது, எந்த கூற்றும் இருக்காது.

**சுழற்சி கூற்று :** நிபந்தனையின் மதிப்பு சோதிக்கப்பட்டு, அதன் மதிப்பு பொய் என வரும் வரை தொடர்ந்து மீண்டும் மீண்டும் இயக்கும்.

**4. ஒரு நெறிமுறைக்கும், நிரலுக்கும் உள்ள வேறுபாடு என்ன?**

**நெறிமுறை :** நெறிமுறை என்பது ஒருங்கிணைக்கப்பட்ட கூற்றுகள் சிக்கலைத் தீர்க்க பயன்படுகின்றன.

**நிரல் :** நிரலாக்க மொழியை கணிப்பொறியில் செயலாக்கம் செய்து சிக்கலை தீர்க்க பயன்படுகின்றன.நிரலாக்க மொழியில் குறிப்பிடும் நெறிமுறை நிரல் எனப்படும்.

**5. செயற்கூறு அருவமாக்கம் என்றால் என்ன?**

நெறிமுறை சார் சிக்கல், பல சிறிய சிக்கல்களாக பிரிக்கப்பட்டு, அவை அருவமாக்கப்படுவது, செயற்கூறுகள் ஆகும். ஒரு செயற்கூறு ஒரு துணை நெறிமுறை ஆகும். ஒரு முழுமையான நெறிமுறையைப் போன்று, செயற்கூறும் உள்ளீடு மற்றும் வெளியீடு பெற்றுள்ளது.

**6. ஒரு கூற்று எவ்வாறு மெருகேற்றப்படுகிறது?**

ஒரு பெரிய சிக்கல், பல சிறிய சிக்கல்களாக பிரிக்கப்பட்ட பின்னர், ஒவ்வொரு சிறிய சிக்கல் கூறுகளும் மேலும் மெருகேற்றப்படும்.

## பகுதி - இ

**சிறு வினாக்கள்.**

**1. கொடுக்கப்பட்டுள்ள இரண்டு பாய்வு படங்களுக்கும், போலிக் குறிமுறை எழுதுக.**




1. Enter A, B
2. Initialize Q = 0, r = A
3. If r ≥ B, then do Q = Q + 1; r = r - B else r, q
4. Exit.

**2. கொடுக்கப்பட்டுள்ள நெறிமுறை வரிசை எண் 2ல், C பொய் எனில், அதன் கட்டுப்பாட்டு பாய்வை காண்க.**

```
1       S1
2   -- C is false
3   if C
4       S2
5   else
6       S3
7   S4
```

**விடை :** S1; S2; S4.

**3. Case பகுப்பாய்வு என்றால் என்ன?**

தேர்ந்தெடுப்பு கூற்று, இரண்டு நிபந்தனைகளை மட்டுமே சோதிக்கும். இரண்டுக்கும் மேற்பட்ட நிபந்தனைகளை சோதித்து, அதனடிப்படையில் செயலாக்கம் செய்ய Case பகுப்பாய்வு பயன்படுகிறது. Case பகுப்பாய்வு ஒரு சிக்கலை சிறு பகுதிகளாக பிரிக்கின்றது. ஒவ்வொரு பகுதியும் தனியே தீர்க்கப்படும்.

**4. தேர்ந்தெடுப்புக் கூற்றுகளைப் பயன்படுத்தி, மூன்று Case பகுப்பாய்வுக்கு, பாய்வுப் படம் ஒன்றை வரைக.**




order@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



**5. ஒரு எண்ணை, கொடுக்கப்பட்டுள்ள இரண்டு வேறுபட்ட வழிகளில், இரட்டிப்பாக்கும் செயற்கூறு ஒன்றை வரையறு. (1) n + n, (2) 2 × n.**

(i) double (n)

-- உள்ளீடு : n என்பது ரியல் எண் அல்லது முழு எண், $n > 0$

-- வெளியீடு : y என்பது ரியல் எண் அல்லது முழு எண், $y = n + n$

(ii) double (n)

-- உள்ளீடு : n என்பது ரியல் எண் அல்லது முழு எண், $n > 0$

-- வெளியீடு : y என்பது ரியல் எண் அல்லது முழு எண், $y = 2 \times n$.

## பகுதி - ஈ

### நெடு வினாக்கள்.

**1. A மற்றும் B எனக் குறிக்கப்பட்டுள்ள இரண்டு கண்ணாடிக் குவளைகள் உள்ளது. அதில், A என்று குறிக்கப்பட்ட குவளை முழுவதும் ஆப்பிள் பாணமும், B என்று குறிக்கப்பட்ட குவளை முழுவதும் திராட்சை பாணமும் வைக்கப்பட்டுள்ளது. இப்போது A மற்றும் B குவளைகளில் உள்ள பாணங்களை ஒன்றிலிருந்து, மற்றொன்றுக்கு மாற்றும் விவரக்குறிப்பு ஒன்றை எழுதுக. மற்றும் விவரக்குறிப்பில் ஏற்றுக்கொள்ளும் வகையில், தொடர் மதிப்பிருத்து கூற்றுகளையும் எழுதுக.**

Exchange (A, B)

-- உள்ளீடு : A, B இவை இரண்டும் முழு எண்கள் அல்லது ரியல் எண்கள். A≠ 0, B ≠ 0

-- வெளியீடு : *t* என்பது முழு எண்கள் மற்றவை

t :=A; A:=B; B:=t.

**2. கீழே கொடுக்கப்பட்டுள்ள A, B மற்றும் C மாறிகளின் மதிப்புகளை ஒன்றிலிருந்து, மற்றொன்றுக்கு சுழற்சியாக மாற்றும் விவரக்குறிப்பு மற்றும் நெறிமுறையை கட்டமைக்கவும். அம்புக்குறியிடப்பட்டுள்ளபடி, B மாறிக்கான மதிப்பு A மாறியிலிருந்தும், C மாறிக்கான மதிப்பு B மாறிலிருந்தும், A மாறிக்கான மதிப்பு C மாறியிலிருந்தும் பெறப்படும்.**




Circulate (A, B, C)

-- உள்ளீடு : A, B, C இவை மூன்றும் முழு எண்கள் அல்லது ரியல் எண்கள், A≠ 0, B ≠ 0, C ≠ 0

-- வெளியீடு : t1:= B; t2:=C மற்றவை

B:=A; C:=t1; A:= t2;

**3. முறையே 5, 8 மற்றும் 3 லிட்டர் கொள்ளளவு கொண்ட மூன்று கண்ணாடி குடுவைகளை தரப்படுகிறது. அதில், 8 லிட்டர் குடுவையில் எண்ணைய் நிரம்பியுள்ளது. மற்ற இரண்டு குடுவைகளும் காலியாக உள்ளன. 8 லிட்டர் குடுவையிலுள்ள எண்ணையை இரண்டு சம அளவாக பிரிக்கவும். பொருத்தமான மாறிகளில், இந்த செயல் நிலையை குறிப்பிடுக. இந்த செயல்நிலையின் தொடக்க மற்றும் இறுதி நிலை என்ன? மதிப்பிருத்தல் மூலமாக, ஒரு குடுவையிலிருந்து, மற்றொரு குடுவைக்கு மாற்றும் செய்யும் மாதிரியை உருவாக்கு. இறுதிநிலையை பெறுவதற்கான தொடர் மதிப்பிருத்து கூற்றுகளை எழுதுக.**

1. A := 8, B:=0, C:=0
2. E, F, T : = A, B, C
3. F : = E - 3
4. T : = F - 3
5. E : = E + T
6. T : = F
   F : = F - 2
7. F : = E - 1
8. F : = F - 1
   T : = T + 1
9. E : = E + T
   T : = T - 3

E F T
1. 8, 0, 0
2. 3, 5, 0
3. 3, 2, 3
   3+3
4. 6 2 0

| E | F | T |
|---|---|---|
| 6, | 2, | 0 |
| 1, | 5, | 2 |
| 1, | 4, | 3 |
| 4, | 4, | 0 |

**4. factorial(4). என்ற செயற்கூற்றின் நெறிமுறையின் படிப்படியான இயக்கத்தை கணிக்கவும்.**

**factorial(n)**

**-- inputs : n is an integer , n ≥ 0**

**-- outputs : f = n!**

**f, i := 1 ,1**

**while i ≤ n**

**f, i := f × i, i + 1**

**விடை :** factorial (4)

i = 1, f = 1;

= f = 1 × 1

= f = 1 × 2

= f = 2 × 3

= f = 6 × 4

= f = 24

order@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores

# 10 பாடம் பாய்வுக் கட்டுப்பாடு

## பொருளடக்கம்

10.1. அறிமுகம்
10.2. கூற்றுகள் (Statements)
10.2.1. வெற்று கூற்று
10.2.2. கலவை (தொகுதி) கூற்று
10.3. கட்டுப்பாட்டு கூற்றுகள்
10.4. தேர்ந்தெடுப்பு கூற்றுகள்
10.4.1. if கூற்று
10.4.2. if-else கூற்று
10.4.3. பின்னலான if கூற்று
10.4.4. if-else-if அடுக்கு
10.4.5. if-else க்கு மாற்றான நிபந்தனை செயற்குறி
10.4.6. switch கூற்று
10.4.7. switch எதிர் if-else: சில வேறுபாடுகள்
10.5. பன்முறைச் செயல் (அல்லது) மடக்கு
10.5.1. மடக்கின் பகுதிகள்
10.5.2. for மடக்கு
10.5.3. while மடக்கு
10.5.4. do-while மடக்கு
10.5.5. பின்னலான மடக்குகள் (Nesting of loops)
10.6. தாவுதல் கூற்றுகள் (Jump Statements)
10.6.1. goto கூற்று
10.6.2. break கூற்று
10.6.3. continue கூற்று



order@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com
www.surabooks.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



# மதிப்பீடு

## பகுதி - அ

**சரியான விடையை தேர்வு செய்யவும்.**

**1. வெற்றுக்கூற்றின் மாற்றுப் பெயர் என்ன?**

அ. கூற்று அல்லா ஆ. காலிக் கூற்று
இ. void கூற்று ஈ. சுழியக் கூற்று

**[விடை. ஆ. காலிக் கூற்று]**

**2. C++ ல் குறிமுறைத் தொகுதிகள் இந்த நிறுத்தற்குறிக்குள் கொடுக்கப்பட வேண்டும்:**

அ. { } ஆ. [ ]
இ. ( ) ஈ. < >

**[விடை. அ. { }]**

**3. சுழற்சியில், மீண்டும் மீண்டும் இயக்கப்படும் குறிமுறைத் தொகுதிகள் இவ்வாறு அழைக்கப்படுகிறது:**

அ. நிபந்தனை ஆ. மடக்கு
இ. கூற்று ஈ. மடக்கின் உடற்பகுதி

**[விடை. ஆ. மடக்கு]**

**4. பல வழி கிளைப் பிரிப்புக் கூற்று:**

அ. if ஆ. if....else
இ. switch ஈ. for

**[விடை. இ. switch]**

**5. சுழற்சிக் கூற்றுகள் எத்தனை வகைப்படும்?**

அ. 2 ஆ. 3
இ. 4 ஈ. 5

**[விடை. ஆ. 3]**

**6. for (int i=0; i<10; i++) என்ற மடக்கு எத்தனை முறை இயங்கும்?**

அ. 0 ஆ. 10 இ. 9 ஈ. 11

**[விடை. ஆ.10]**

**7. பின்வருவனவற்றில் எது வெளியேறல் சோதிப்பு மடக்கு?**

அ. for ஆ. while
இ. do....while ஈ. if.....else

**[விடை. இ. do....while]**

**8. தாவுதல் கூற்றுகளின் சிறப்புச் சொற்களில் பொருந்தா ஒன்றை கண்டுபிடி.** [QY. 2019 ; செப்டம்பர் 2020]

அ. break ஆ. switch
இ. goto ஈ. continue

**[விடை. ஆ. switch]**

**9. பின்வருவனவற்றில் எது நுழைவு சோதிப்பு மடக்கு?**

அ. for ஆ. while
இ. do....while ஈ. if......else

**[விடை. ★ அ. மற்றும் ஆ. for மற்றும் while]**

**10. ஒரு மடக்கு அதன் உடற்பகுதியில் மற்றொரு மடக்கை பெற்றிருப்பது:** [செப்டம்பர் 2021]

அ. பின்னலான மடக்கு
ஆ. உள் மடக்கு
இ. உள்ளிணைந்த மடக்கு
ஈ. மடக்குகளின் பின்னல்

**[விடை. அ. பின்னலான மடக்கு]**

## பகுதி - ஆ

**குறு வினாக்கள் (2 மதிப்பெண்கள்)**

**1. வெற்றுக்கூற்று மற்றும் கூட்டுக்கூற்று என்றால் என்ன?**

**வெற்று கூற்று :** அரைப்புள்ளியை மட்டுமே கொண்டிருக்கும் கூற்றை "வெற்று அல்லது வெறுமைக் கூற்று" எனப்படும்.

**கூட்டுக் கூற்று :** C++ கூற்றுகளின் தொகுப்பினை நெளிவு அடைப்புக்குறிகளுக்குள் உள்ளடக்க அனுமதிக்கிறது. இந்த கூற்றுகளின் தொகுப்பினை கலவை கூற்று அல்லது தொகுதி என்கிறோம்.

**2. தேர்ந்தெடுப்புக் கூற்றுகள் என்றால் என்ன? அதன் வகைகளை எழுதுக.**

நிபந்தனை அடிப்படையில் நிறைவேற்றப்படும் கூற்றுகள் தேர்ந்தெடுப்பு கூற்றுகள் எனப்படும்.

**அதன் வகைகள்**

(i) if கூற்று
(ii) if-else கூற்று
(iii) nested-if கூற்று
(iv) switch-case கூற்று

**3. பின்வரும் நிரலில் உள்ள பிழைகளை சரி செய்க.**

```
if (x=1)
  p=100;
else
  p=10;
```

**விடை :**

```
if (x == 1)
   p = 100;
else
   p = 10;
```

order@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



**பொது வடிவம்:** for (தொடக்க மதிப்பிருத்தல்; சோதிப்பு நிபந்தனை; மிகுப்பு கோவைகள்)

```
{
    நிரல் கூற்று 1;
    நிரல் கூற்று 2;
      ................
}
```

**நிரல் கூற்று - x;** தொடக்க மதிப்பிருத்தல் பகுதி, கட்டுப்பாட்டு மாறியை அறிவிக்க அல்லது மாறியின் மதிப்பிருத்த பயன்படுகிறது. இந்த பகுதி ஒரு முறை மட்டும் இயக்கப்படும். பின்னர் நிரல் பாய்வு, சோதிப்பு நிபந்தனை கோவைக்கு செல்லும். கட்டுப்பாட்டு கோவையின் நிபந்தனை சோதிக்கப்பட்டு, அதன் மதிப்பு தவறு என்று வந்தால் நிரல் கூற்று-X இயங்கும். மதிப்பு சரியென்று வந்தால் for மடக்கின் உடற்பகுதி இயக்கப்பட்டு, பின்னர் நிரல் பாய்வு மிகுப்பு கோவைக்கு அனுப்பி வைக்கப்படும். மிகுப்பு கோவை செயல்பட்ட பின்னர், மீண்டும் சோதிப்பு நிபந்தனை கோவைக்கு அனுப்பி வைக்கப்படும்.

**எடுத்துக்காட்டு :**

```
#include <iostream>
using namespace std;
int main ()
{
int i;
for(i = 0; i < 10; i ++ )
cout<< "value of i : " <<i<<endl;
return 0;
}
```

## கூடுதல் வினாக்கள்

### பகுதி - அ

**சரியான விடையை தேர்வு செய்யவும். (1 மதிப்பெண்)**

**கீழ்க்கண்ட வினாக்களுக்கு சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **C++ நிரலில் எத்தனை வகையான, கூற்றுகள் பயன்படுத்தபடுகின்றன?**

அ. 3 ஆ. 2
இ. 6 ஈ. 4 **[விடை. ஆ. 2]**

2. **தாவலுக்கு காரணமான நிரல் கூற்றுகள் எவ்வாறு அழைக்கப்படும்?**

அ. வெற்று கூற்றுகள் ஆ. கலவை கூற்றுகள்
இ. கட்டுப்பாடு கூற்றுகள் ஈ. நிரல் கூற்றுகள்
**[விடை. இ. கட்டுப்பாடு கூற்றுகள்]**

3. **பின்வருவனற்றுள் வெற்று அல்லது வெறுமைக்கூற்று எதனை மட்டுமே கொண்டிருக்கும்?**

அ. ; ஆ. :
இ. , ஈ. { } **[விடை. அ. ;]**

4. **மடக்கில் இட உணர்த்திகளாக பயன்படுவது எது?**

அ. கட்டுப்பாடு கூற்றுகள் ஆ. நிகரான செயற்கூற்றுகள்
இ. வெற்றுகூற்றுகள் ஈ. switch கூற்று
**[விடை. இ. வெற்றுகூற்றுகள்]**

5. **பின்வருவனவற்றுள் செயற்கூறு மற்றும் கலவை கூற்றுகளின் முடிவில் இடம் பெறும் கூற்று எது?**

அ. if கூற்று ஆ. else-if கூற்று
இ. வெற்று கூற்று ஈ. வெறுமைக் கூற்று
உ. இ அல்லது ஈ **[விடை. உ. இ அல்லது ஈ]**

6. **பின்வருவனற்றுள் C++ கூற்றுகளின் தொகுப்பினை உள்ளடக்க அனுமதிக்கும் அடைப்புக்குறி எது?**

அ. { } ஆ. ( )
இ. [ ] ஈ. < > **[விடை. அ. { }]**

7. **நெளிவு அடைப்புக்குறிகளுக்குள் அடைக்கப்படும் கூற்றுகளின் தொகுதி எவ்வாறு அழைக்கப்படும்?**

(i) கலவை கூற்று (ii) தொகுதி
(iii) வெற்று கூற்று

அ. (i) மட்டும் ஆ. (ii) மட்டும்
இ. (i) அல்லது (ii) ஈ. (ii) இவை எல்லாம்
**[விடை. இ. (i) அல்லது (ii)]**

8. **பின்வருவனவற்றுள் கட்டளைகளின் பாய்வு வரிசை முறையை மாற்றி அமைக்க உதவும் கூற்றுகள் எவை?**

அ. தேர்ந்தெடுப்புக் கூற்று
ஆ. கட்டுப்பாட்டு கூற்று
இ. மடக்கு கூற்று ஈ. இவை எல்லாம்
**[விடை. ஆ. கட்டுப்பாட்டு கூற்று]**

9. **பின்வருவனவற்றுள் ஒரு நிரலிலுள்ள கூற்றுகள் எதன் மூலம் இயக்கப்படுகிறது?**

அ. வரிசைமுறை கூற்று ஆ. தேர்ந்தெடுப்பு கூற்று
இ. மடக்கு கூற்று ஈ. இவை எல்லாம்
**[விடை. ஈ. இவை எல்லாம்]**

order@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



**10. அனைத்து நிரலாக்க மொழிகளும் பின்வருவனவற்றுள் எதனை கொண்டுள்ளது?**

(i) வரிசைமுறை கூற்று
(ii) தேர்ந்தெடுப்பு கூற்று (iii) மடக்கு கூற்று

அ. (i) மட்டும் ஆ. (ii) மட்டும்
இ. (i) மற்றும் (ii) ஈ. i, ii மற்றும் iii

**[விடை. ஈ. i, ii மற்றும் iii]**

**11. பின்வருவனவற்றுள் செயல்முறை பாய்வுக் கட்டுப்பாடு எவை?**

அ. கிளை பிரித்தல் ஆ. மடக்கு
இ. தாவுதல் ஈ. செயற்கூறு அழைப்பு
உ. இவையெல்லாம் **[விடை. உ. இவையெல்லாம்]**

**12. பின்வரும் எந்த கூற்று கட்டளைகளின் பாய்வு வரிசை முறையை மாற்றி அமைக்காது?**

அ. மடக்கு ஆ. தாவுதல்
இ. வரிசைமுறை ஈ. செய்கூறு அழைப்பு

**[விடை. இ. வரிசைமுறை]**

**13. பின்வரும் எந்த குறியுடன் வரிசைமுறை கூற்று முற்றுப்பெறும்?**

அ. ; ஆ. :
இ. // ஈ. # **[விடை. அ. ;]**

**14. நிபந்தனை அடிப்படையில் நிறைவேற்றப்படும் கூற்றுகள் எவ்வாறு அழைக்கப்படும்?**

(i) வெறுமைக் கூற்று (ii) தேர்ந்தெடுப்புக் கூற்று
(iii) தீர்மானிப்புக் கூற்று (iv) கலவை கூற்று

அ. ii மட்டும் ஆ. ii மற்றும் iii
இ. (i) மற்றும் ii ஈ. (ii) மற்றும் (iv)

**[விடை. ஆ. ii மற்றும் iii]**

**15. பின்வரும் எந்த கூற்றை பன்முறைச் செயல் கூற்று எனலாம்?**

அ. கிளைபிரித்தல் ஆ. தேர்ந்தெடுப்பு
இ. மடக்கு ஈ. தீர்மானிப்பு

**[விடை. இ. மடக்கு]**

**16. மடக்கு மற்றும் தேர்ந்தெடுப்பு கூற்று பின்வரும் எதன் அடிப்படையில் நிறைவேற்றப்படும்?**

அ. செயற்கூறு ஆ. செயற்குறி
இ. தாவுதல் ஈ. நிபந்தனை

**[விடை. ஈ. நிபந்தனை]**

**17. பின்வரும் எந்த கோவை சரி அல்லது தவறு என்ற மதிப்புகளை விடையாக தரும்?**

அ. நிபந்தனை ஆ. கணக்கீட்டு
இ. மிகுப்பு ஈ. ஏதுமில்லை

**[விடை. அ. நிபந்தனை]**

**18. பின்வருவனவற்றுள் நிரல்களில் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு தாவ உதவும் கூற்று எது?**

(i) தேர்ந்தெடுப்பு (ii) தீர்மானிப்பு
(iii) மடக்கு (iv) பன்முறைச் செயல்

அ. i ஆ. ii
இ. i அல்லது ii ஈ. iii அல்லது iv

**[விடை. இ. i அல்லது ii]**

**19. பின்வருவனவற்றுள் தீர்மானிப்புக் கூற்று எது?**

அ. for ஆ. while
இ. do-while ஈ. if **[விடை. ஈ. if]**

**20. பின்வரும் எந்த குறியினுள் if கூற்றின் நிபந்தனைகள் கொடுக்கப்பட வேண்டும்?**

அ. ( ) ஆ. { }
இ. [ ] ஈ. < > **[விடை. அ. ( )]**

**21. பின்வருவனவற்றுள் எந்த கூற்று கட்டுப்பாட்டு பாய்வு கூற்றாகும்?**

அ. if ஆ. if-else
இ. for ஈ. case

**[விடை. ஆ. if-else]**

**22. பின்வரும் எந்த கூற்றுகள் if- கூற்றின் நிபந்தனை சரி என்றால் இயக்கப்படும் கூற்றுகள்?**

(i) வெற்றுக்கூற்று (ii) கலவை கூற்று
(iii) மதிப்பிருத்து கூற்று

அ. i மட்டும் ஆ. ii மட்டும்
இ. i, ii மற்றும் iii ஈ. i மற்றும் iii

**[விடை. இ. i, ii மற்றும் iii]**

**23. பின்வருவனவற்றுள் நிபந்தனை அடிப்படையில் இயக்கப்படாத கூற்று எது?**

அ. மடக்கு ஆ. தீர்மானிப்பு
இ. தேர்ந்தெடுப்பு ஈ. வரிசைமுறை

**[விடை. ஈ. வரிசைமுறை]**

**24.** if (a>=18)

cout<<"you are elgible to drive" **என்பது பின்வரும் எந்த கூற்றின் எடுத்துக்காட்டு?**

அ. வரிசைமுறை ஆ. தீர்மானிப்பு
இ. மடக்கு ஈ. பன்முறை செயல்

**[விடை. ஆ. தீர்மானிப்பு]**

**25. ஒரு if கூற்று மற்றொரு if கூற்றை கொண்டிருந்தால் அந்த கூற்று எவ்வாறு அழைக்கப்படும்?**

அ. if ஆ. if-else
இ. பின்னலான if ஈ. தொகுப்பு-if

**[விடை. இ. பின்னலான if]**

order@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



**26.** பின்வருவனவற்றுள் பல வழி தீர்மானிப்பு கூற்று என்பது எது?

(i) if-else (ii) பின்னலான if
(iii) if-else அடுக்கு

அ. i மட்டும் ஆ. ii மட்டும்
இ. iii மட்டும் ஈ. ii மற்றும் iii

[விடை. இ. iii மட்டும்]

**27.** பின்வருவனவற்றுள் எந்த கூற்று இறுதியான else கூற்றுடன் முடிவு பெறும்?

அ. பின்னலான if ஆ. if-else அடுக்கு
இ. பின்னலான else ஈ. switch

[விடை. ஆ. if-else அடுக்கு]

**28.** if என்னும் சிறப்புச் சொல்லைத் தொடர்ந்து ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட else if கூற்றுகள் இடம் பெற்றிருக்கும் கூற்று எது?

அ. if ஆ. if-else
இ. if-else அடுக்கு ஈ. மடக்கு

[விடை. இ. if-else அடுக்கு]

**29.** பின்வருவனவற்றுள் எந்த செயற்குறி if-else கூற்றின் மாற்று வழியாகும்?

அ. தருக்கச் செயற்குறி ஆ. ஒப்பிட்டுச் செயற்குறி
இ. ஒருமச் செயற்குறி
ஈ. நிபந்தனை செயற்குறி

[விடை. ஈ. நிபந்தனை செயற்குறி]

**30.** எத்தனை குறியீடுகளை கொண்டுள்ளது மும்ம செயற்குறி?

அ. 2 ஆ. 3
இ. 4 ஈ. பல [விடை. அ. 2]

**31.** பின்வருவனவற்றுன் நிபந்தனை செயற்குறியின் குறியீடுகள் எவை?

அ. ++,– – ஆ. ? :
இ. :, :: ஈ. ;,: [விடை. ஆ. ? :]

**32.** பின்வருவனவற்றுள் எத்தனை செயலுருப்புகளை நிபந்தனை செயற்குறி ஏற்கும்?

அ. 2 ஆ. 4
இ. 6 ஈ. 3 [விடை. ஈ. 3]

**33.** பின்வருவனவற்றுள் ஒன்றுக்கும் மேற்பட்ட if-else கூற்றுகளுக்கு மாற்றாக அமைந்த கூற்று எது?

அ. if-else அடுக்கு ஆ. பின்னலான if
இ. if ஈ. switch கூற்று

[விடை. ஈ. switch கூற்று]

**34.** switch கூற்றில் தரப்பட்டுள்ள கோவையின் விடை பின்வரும் எதன் மதிப்பாக இருத்தல் வேண்டும்?

அ. செயற்குறியின் ஆ. நிறுத்தக்குறியின்
இ. மாறியின் ஈ. மாறிலியின்

[விடை. ஈ. மாறிலியின்]

**35.** பின்வருவனவற்றுள் எந்த கூற்று switch கூற்றில் கட்டாயமில்லை?

(i) case (ii) break (iii) default

அ. i மட்டும் ஆ. iii மட்டும்
இ. (i) மற்றும் (iii) ஈ. ii மற்றும் iii

[விடை. ஆ. iii மட்டும்]

**36.** பல தேர்வுகளுக்கு ஒரு கோவையைப் பயன்படுத்தும் கூற்று எது?

அ. for ஆ. switch
இ. while ஈ. do-while

[விடை. ஆ. switch]

**37.** பின்வருவனவற்றுள் எது தேர்ந்தெடுப்பு கூற்றாகும்?

அ. for ஆ. while
இ. do-while ஈ. ஏதுமில்லை

[விடை. ஈ. ஏதுமில்லை]

**38.** பின்வருவனவற்றுள் மிகுந்த ஆற்றல் மிக்க கூற்று எது?

அ. switch ஆ. if
இ. break ஈ. continue

[விடை. ஆ. if]

**39.** ஒரு கோவையின் மதிப்பின் அடிப்படையில் பல்வேறு நிரல் பகுதிகளுக்கு கட்டுப்பாட்டை எடுத்துச் செல்லும் கூற்று எது?

அ. if ஆ. switch
இ. for ஈ. case

[விடை. ஆ. switch]

**40.** பதிப்பாய்வு செய்ய எளிதாக பயன்படும் கூற்று எது?

அ. if ஆ. if-else
இ. பின்னலான if ஈ. switch

[விடை. ஈ. switch]

**41.** சமமான மற்றும் தருக்க கோவையை கண்டறிய பயன்படும் கூற்று எது?

அ. for ஆ. continue
இ. if-else ஈ. switch

[விடை. இ. if-else]

**42.** சமமான கோவையை மட்டுமே கண்டறிய பயன்படும் கூற்று எது?

அ. for ஆ. switch
இ. if-else ஈ. default

[விடை. ஆ. switch]

**43.** Switch கூற்றில் குறியுறு மாறிலிகள் எந்த குறியீட்டின் மதிப்பிற்கு மாறி கொள்ளும்?

அ. ASCII ஆ. BCD
இ. EBCDIC ஈ. ISCII

[விடை. அ. ASCII]

order@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



**44.** **பின்வருனவற்றுள் எந்த கூற்று மடக்குகளின் பயன்பாடாக எடுத்துக் கொள்ளலாம்?**
(i) நிரலின் நீளத்தை குறைக்கும்
(ii) நிரலின் நேரத்தை குறைக்கும்
(iii) நிரலில் இயக்கவும், குறைவான நினைவக இடத்தை எடுத்துக் கொள்ளும்
அ. i மட்டும் ஆ. ii மட்டும்
இ. i மற்றும் iii ஈ. இவை எல்லாம்
**[விடை. ஈ. இவை எல்லாம்]**

**45.** **பின்வருவனவற்றுள் எது மடக்கு கூற்று இல்லை?**
அ. goto ஆ. for
இ. while ஈ. do-while
**[விடை. அ. goto]**

**46.** **ஒவ்வொரு மடக்கும் பல்வேறு பயன்பாடுகளுக்கான எத்தனை கூறுகளை கொண்டுள்ளது?**
அ. 3 ஆ. 5
இ. 4 ஈ. 2 **[விடை. இ. 4]**

**47.** **பின்வருவனவற்றுள் எந்த மடக்கு ஒரு எளிய மடக்கு?**
அ. for ஆ. while
இ. do-while ஈ. if-else
**[விடை. அ. for]**

**48.** **பரிசோதிப்பு நிபந்தனை கோவையின் சோதிப்பு நிலையை அடிப்படையாகக் கொண்டு மடக்குகளை எத்தனை வகையாக பிரிக்கப்படுகிறது?**
அ. 3 ஆ. 4
இ. 2 ஈ. பல **[விடை. இ. 2]**

**49.** **எத்தனை கூறுகளை for மடக்கு கொண்டிருக்கும்?**
அ. 4 ஆ. 5
இ. 2 ஈ. 3 **[விடை. ஈ. 3]**

**50.** **for மடக்கின் மூன்று கூற்றுகளை பின்வரும் எந்த குறியின் மூலம் பிரிக்கப்படும்?**
அ. காழ்ப்புள்ளி ஆ. அரைப்புள்ளி
இ. புள்ளி ஈ. கேள்விகுறி
**[விடை. ஆ. அரைப்புள்ளி]**

**51.** **பின்வருவனவற்றுள் மடக்கு கூற்றினை இயக்கும் கூற்று இல்லாதது எது?**
அ. தொடக்க மதிப்பிருத்தல்
ஆ. மிகுப்பு கோவைகள்
இ. தருகக்கோவை ஈ. சோதிப்பு நிபந்தனை
**[விடை. இ. தருகக்கோவை]**

**52.** **for (i=0; i>5; i++) { = }; என்ற மடக்கு எத்தனை முறை இயங்கும்?**
அ. 4 ஆ. 5
இ. 0 ஈ. பலமுறை
**[விடை. ஈ. பலமுறை]**

**53.** **பின்வருவனவற்றுள் நெகிழ்வு மற்றும் பொருந்தும் தன்மையை மடக்கிற்கு வழங்குகிறது?**
அ. பரிசோதிப்பு நிபந்தனை
ஆ. மாறுபட்ட வடிவங்கள்
இ. புதுபித்தல் கோவை
ஈ. மடக்கின் உடற்பகுதி
**[விடை. ஆ. மாறுபட்ட வடிவங்கள்]**

**54.** **பின்வரும் for மடக்கின் வெளியீடு என்ன?**
for (i=0, j=0; i= =0; j= =0; i++, --j)
cout <<i<<j;
அ. 0 0 ஆ. 1 -1
இ. 0 -1 ஈ. -1 -1
**[விடை. இ. 0 -1]**

**55.** **பின்வருவனவற்றுள் எது C++ மொழியில் ஓர் முக்கிய மடக்கு கூற்றாகும்?**
அ. for ஆ. while
இ. do-while ஈ. if-else
**[விடை. அ. for]**

**56.** **for மடக்கினுள் ஒன்றுக்கும் மேற்பட்ட கூற்றுகளை நிறைவேற்றும் போது அவைகளை எதனை கொண்டு பிரிக்கப்பட்டிருக்க வேண்டும்?**
அ. ; ஆ. :
இ. , ஈ. . **[விடை. இ. ,]**

**57.** **பின்வரும் எந்த கூற்று மிக விரைவாக இயக்கப்படும்?**
(i) ++a (ii) a++
அ. i மட்டும் ஆ. ii மட்டும்
இ. (i) மற்றும் (ii) ஈ. இவை ஏதுமில்லை
**[விடை. ஆ. ii மட்டும்]**

**58.** **பின்வனவற்றுள் எவற்றை for மடக்கில் விருப்ப கோவைகளாக பயன்படுத்தப்படலாம்?**
(i) தொடக்க மதிப்பு
(ii) நிபந்தனை கோவை
(iii) மிகுப்பு கோவை
அ. (i) மற்றும் (ii) ஆ. (ii) மற்றும் (iii)
இ. (i) மற்றும் (iii) ஈ. (i), (ii), மற்றும் (iii)
**[விடை. ஈ. (i), (ii), மற்றும் (iii)]**

**59.** **ஒரு மடக்கில் எந்த கூற்றும் இடம் பெறவில்லை என்றால் அது எவ்வாறு அழைக்கப்படும்?**
அ. வெற்று மடக்கு
ஆ. முடிவில்லா மடக்கு
இ. முடிவு மடக்கு
ஈ. பன்முறைசெயல் மடக்கு
**[விடை. அ. வெற்று மடக்கு]**

order@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



**60. பின்வரும் நிரலில் எப்போது while மடக்கு வெளியே செல்லும்?**

```
int i=1;
    while (i<5)
    {
        s=s+i;
        i++
    }
```

அ. i=4 ஆ. i=5
இ. i=6 ஈ. s=10

**[விடை. ஆ. i=5]**

**61. பின்வருவனவற்றுள் எந்த மடக்கு ஒரு வெளியேறல் சோதிப்பு மடக்காகும்?**

அ. for ஆ. while
இ. do-while ஈ. if-else

**[விடை. இ. do-while]**

**62. பின்வருவனவற்றுள் எந்த மடக்கு ஒரு நுழைவு சோதனை மடக்காகும்?**

(i) for (ii) while
(iii) do-while

அ. (i) மற்றும் (iii) ஆ. (ii) மற்றும் (iii)
இ. (i) மற்றும் (ii) ஈ. (ii) மற்றும் (iii)

**[விடை. இ.(i) மற்றும் (ii)]**

**63. பின்வரும் எந்த மடக்கில் null கூற்றைத் தவிர வேறு எந்த கூற்றும் இடம் பெற்றிருக்காது?**

அ. வெறுமை மடக்கு
ஆ. while மடக்கு
இ. நேரடி தாமத மடக்கு
ஈ. முடிவற்ற மடக்கு **[விடை. அ. வெறுமை மடக்கு]**

**64. do-while மடக்கில் நிபந்தனை தவறு என மதிப்பிடப்படும் போது மடக்கின் உடற்பகுதி எத்தனை முறை நிறைவேற்றப்படும்?**

அ. 2 ஆ. 3
இ. 1 ஈ. 4 **[விடை. இ. 1]**

**65. பின்வரும் நிரலின் வெளியீடு என்ன?**

```
int n=5;
do
{
    cout<<n<<",";
    n--;
    }while (i>5)
```

அ. 5, 4, 3, 2, 1 ஆ. 5
இ. 1, 2, 3, 4, 5 ஈ. compilation error

**[விடை. ஆ. 5]**

**66. பின்வருவனவற்றுள் எந்த கூற்று நிரலின் ஓட்டத்தை குறுக்கிட உதவுகிறது?**

அ. தேர்ந்தெடுப்பு ஆ. தாவுதல்
இ. கிளைபிரித்தல் ஈ. மடக்கு

**[விடை. ஆ. தாவுதல்]**

**67. பின்வருவனவற்றுள் எது தாவுதல் கூற்றின் வகை இல்லை?**

அ. if-else ஆ. goto
இ. break ஈ. continue

**[விடை. அ. if-else]**

**68. மாறி a-வின் மாறிலி 11 - என்றால் கீழே உள்ள நிரலின் வெளியீடு என்ன?**

```
int a;
switch (a)
    {
    case 0;
    cout<<"The number is zero";break;
    default:
    cout<<"The number is non zero";break;
    int b=a%2;
    switch (b)
    {
    case 0;
    cout<<"The number is even";break;
    case 1;
    cout<<"The number is odd";break;
    }
}
```

(i) The number is zero
(ii) The number is non zero
(iii) The number is even
(iv) The number is odd

அ. i மற்றும் iv ஆ. ii மற்றும் iii
இ. ii and i ஈ. ii மற்றும் iv

**[விடை. ஈ. ii மற்றும் iv]**

**கீழ்க்கண்ட கோடிட்ட இடத்திற்கு சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. கலவை கூற்று ........... என அழைக்கப்படுகிறது.**

அ. தொகுதி ஆ. செயல்பாடு
இ. செயற்கூறு ஈ. வெற்று கூற்று

**[விடை. அ. தொகுதி]**

**2. மேலிருந்து கீழாக ஒன்றன் பின் ஒன்றாக நிறைவேற்றபடும் கூற்றுகள் ............... என அழைக்கப்படும்.**

அ. மடக்கு ஆ. தேர்ந்தெடுப்பு
இ. வரிசைமுறை ஈ. செய்கூறு அழைப்பு

**[விடை. இ. வரிசைமுறை]**

order@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



**3. தேர்ந்தெடுப்புக் கூற்று .................. என அழைக்கப்படும்.**

அ. வெறுமை ஆ. கலவை
இ. செயற்கூறு ஈ. தீர்மானிப்பு

**[விடை. ஈ. தீர்மானிப்பு]**

**4. ஒரு கட்டளைத் தொகுதியை நிபந்தனை அடிப்படையில் மீண்டும் மீண்டும் செயல்படுத்தும் கூற்று ................ என அழைக்கப்படும்.**

அ. தேர்ந்தெடுப்பு ஆ. மடக்கு
இ. தீர்மானிப்பு ஈ. இணைபிரித்தல்

**[விடை. ஆ. மடக்கு]**

**5. C++ மொழியில் .................. வகையான தேர்ந்தெடுப்பு கூற்றுகள் உள்ளன.**

அ. 2 ஆ. 3
இ. 4 ஈ. 6 **[விடை. அ. 2]**

**6. ஒன்றுக்கு மேற்பட்ட கட்டளை தொகுதிகளை இயக்க பயன்படும் கூற்று ..................**

அ. கை ஆ. கை-else
இ. switch-case ஈ. do-while

**[விடை. இ. switch-case]**

**7. .................. வடிவங்களில் பின்னலான if கூற்றுகள் அமைக்கப்படும்.**

அ. 3 ஆ. 4
இ. 2 ஈ. பல வடிவங்களில்

**[விடை. அ. 3]**

**8. நிபந்தனை செயற்குறி என்பதை .................. என்றும் அழைக்கலாம்.**

அ. மும்ம செயற்குறி ஆ. நகர்வு செயற்குறி
இ. கணக்கீட்டு செயற்குறி ஈ. தருக்கச் செயற்குறி

**[விடை. அ. மும்ம செயற்குறி]**

**9. பல வழி கிளைப் பிரிப்பு கூற்று என்பது............**

அ. if-else கூற்று ஆ. if-else கூற்று
இ. பின்னலான if ஈ. switch கூற்று

**[விடை. ஈ. switch கூற்று]**

**10. குறியுரு அல்லது முழு எண் தரவு வகையை மட்டுமே மதிப்பீடு செய்யும் கூற்று ..................**

அ. for ஆ. if
இ. while ஈ. switch

**[விடை. ஈ. switch]**

**11. C++-ல் ............ வகையான மடக்கு கூற்றுகள் உள்ளன?**

அ. 2 ஆ. 3
இ. 4 ஈ. 5 **[விடை. ஆ. 3]**

**12. பாய்வுக் கட்டுப்பாட்டு கூற்றுகள் எனக் கூறப்படுவது.......**

அ. தேர்ந்தெடுப்பு கூற்று ஆ. தீர்மானிப்பு கூற்று
இ. பன்முறைச் செயல் கூற்று
ஈ. வெறுமைக்கூற்று

**[விடை. இ. பன்முறைச் செயல் கூற்று]**

**13. ஒரு நிரலை சில நொடிகள் இடைதிருத்தப் பயன்படுத்துவது ..................**

அ. காலி மடக்கு ஆ. வெறுமை மடக்கு
இ. முடிவற்ற மடக்கு ஈ. நேரடி தாமத மடக்கு

**[விடை. ஈ. நேரடி தாமத மடக்கு]**

**14. .................. வகையான தாவுதல் கூற்றுகள் உள்ளன.**

அ. 4 ஆ. 5
இ. 2 ஈ. 3 **[விடை. ஈ. 3]**

**பின்வருவனவற்றுள் எந்த கட்டளை சரி அல்லது தவறு என எழுதுக.**

**1.** (i) கட்டுப்பாட்டு கூற்றுகள் கட்டளைகளின் பாய்வு வரிசை முறையை மாற்றி அமைக்காது.
(ii) அனைத்து நிரலாக்க மொழிகளும் மூன்று வகையாக கூற்றுகளை கொண்டுள்ளது.
(iii) தேர்ந்தெடுப்புக் கூற்று என்பது மேலிருந்து கீழாக ஒன்றன் பின் ஒன்றாக நிறைவேற்றப்படும் கூற்றுகளாகும்.
(iv) C++ மொழியில் சுழியம் அல்லாது எந்தவொரு எண்ணும் 'தவறு" என எடுத்து கொள்ளப்படும்.

அ. i- தவறு, ii- சரி, iii- தவறு, iv- சரி
ஆ. i- தவறு, ii- தவறு, iii- தவறு, iv- தவறு
இ. i- தவறு, ii- சரி, iii- தவறு, iv- தவறு
ஈ. i- தவறு, ii- சரி, iii- சரி, iv- தவறு

**[விடை. இ. i- தவறு, ii- சரி, iii- தவறு, iv- தவறு]**

**2.** (i) மடக்கு கூற்றை தீர்மானிப்பு கூற்று என்றும் அழைக்கலாம்.
(ii) C++ மொழியில் எதிர்மறை எண் சுழியம் 'சரி' என்று எடுத்து கொள்ளப்படும்.
(iii) நிபந்தனை கோவை சரி அல்லது தவறு என்ற மதிப்புகளை விடையாக தரும்.
(iv) நிபந்தனை கோவையில் வெளியீட்டு மதிப்பை அடிப்படையாக கொண்டு மடக்கு மற்றும் தேர்ந்தெடுப்பு கூற்றுகள் இயங்குகிறது.

அ. i- சரி, ii- தவறு, iii- தவறு, iv- சரி
ஆ. i- தவறு, ii- தவறு, iii- சரி, iv- சரி
இ. i- தவறு, ii- சரி, iii- சரி, iv- தவறு
ஈ. i- சரி, ii- சரி, iii- தவறு, iv- தவறு

**[விடை. ஆ. i- தவறு, ii- தவறு, iii- சரி, iv- சரி]**

order@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



**3.** (i) break தாவுதல் கூற்று கட்டுப்பாட்டு மடக்கினை விட்டு வெறியேற செய்யும்.

(ii) break தாவுதல் கூற்று மடக்கினுள் உடற்பகுதிக்கு அடுத்துள்ள கூற்றுகளை இயங்கச் செய்யாது.

(iii) contiune கூற்று switch கூற்றில் பயன்படுத்தப்படும்.

(iv) continue கூற்று மடக்கை முடித்து வைப்பதற்கு பதிலாக மடக்கை அடுத்து சுழற்சிக்கு இட்டுச்செல்லும்.

அ. i- சரி, ii- தவறு, iii- தவறு, iv- தவறு
ஆ. i- சரி, ii- தவறு, iii- தவறு, iv- சரி
இ. i- தவறு, ii- தவறு, iii- தவறு, iv- சரி
ஈ. i- தவறு, ii- தவறு, iii- சரி, iv- சரி

**[விடை. ஆ. i- சரி, ii- தவறு, iii- தவறு, iv- சரி]**

**4.** (i) தரத்தை ஒப்பிடுதலுக்கான பணிக்கு மட்டுமே பயன்படும் கூற்று switch கூற்றாகும்.

(ii) switch கூற்றில் இரு case கூற்றுகளுக்கு ஒரே மதிப்புகள் இருக்கக் கூடாது.

(iii) switch கூற்று குறியுரு தரவுவை மதிப்பீடு செய்யும்.

(iv) பல தேர்வுகளிலிருந்து ஒன்றை தேர்வு செய்ய வேண்டிய சூழ்நிலையில் switch கூற்று மிகவும் பொருத்தமான தேர்வாகும்.

அ. i- சரி, ii- தவறு, iii- தவறு, iv- தவறு
ஆ. i- சரி, ii- சரி, iii- தவறு, iv- தவறு
இ. i- தவறு, ii- சரி, iii- தவறு, iv- சரி
ஈ. i- சரி, ii- சரி, iii- சரி, iv- சரி

**[விடை. ஈ. i- சரி, ii- சரி, iii- சரி, iv- சரி]**

**5.** (i) switch கூற்று பல வழி கிளைப்பிரிப்பு கூற்றாகும்.

(ii) if-else கூற்றுகளுக்கு மாற்றாக if-else அடுக்கு மாற்றாக அமைந்துள்ளது.

(iii) switch கூற்றில் தரப்பட்டுள்ள கோவையின் விடை மாறிலி மதிப்பாக இருத்தல் கூடாது.

(iv) switch கூற்றில் default கூற்று கட்டயாமில்லை

அ. i- தவறு, ii- சரி, iii- தவறு, iv- சரி
ஆ. i- சரி, ii- தவறு, iii- தவறு, iv- சரி
இ. i- சரி, ii- சரி, iii- தவறு, iv- தவறு
ஈ. i- தவறு, ii- சரி, iii- சரி, iv- தவறு

**[விடை. ஆ. i- சரி, ii- தவறு, iii- தவறு, iv- சரி]**

**6.** (i) ஒரு if கூற்றுக்கு உள்ளே மற்றொரு if கூற்றை அமைக்கலாம்.

(ii) ஒரு if கூற்றின் else கூற்றுக்குள் மற்றொரு if கூற்றை அமைக்க முடியாது.

(iii) ஒரு if கூற்றுக்கு உள்ளே ஒரு if கூற்றும், else கூற்றுக்கு உள்ளே மற்றொரு else கூற்றும் அமைக்க முடியும்.

அ. i- சரி, ii- சரி, iii- தவறு
ஆ. i- சரி, ii- தவறு, iii- தவறு
இ. i- தவறு, ii- தவறு, iii- தவறு
ஈ. i- சரி, ii- சரி, iii- தவறு

**[விடை. ஆ. i- சரி, ii- தவறு, iii- தவறு]**

**7.** (i) நிபந்தனை செயற்குறி என்பது மும்ம செயற்குறி என்றும் அமைக்கலாம்.

(ii) நிபந்தனை செயற்குறி நான்கு செயலுருப்புகளை ஏற்கும்.

(iii) நிபந்தனை செயற்குறி பின்னலான if கூற்றின் மாற்று வழியாகும்?

(iv) நிபந்தனை செயற்குறி ? : என்ற குறியீடுகளை கொண்டுள்ளது?

அ. i- தவறு, ii- தவறு, iii- சரி, iv- சரி
ஆ. i- சரி, ii- தவறு, iii- சரி, iv- தவறு
இ. i- சரி, ii- தவறு, iii- தவறு, iv- சரி
ஈ. i- தவறு, ii- சரி, iii- சரி, iv- தவறு

**[விடை. இ. i- சரி, ii- தவறு, iii- தவறு, iv- சரி,]**

**8.** (i) வெற்று கூற்றுகள் அரைப்புள்ளியை மட்டுமே கொண்டிருக்கும்

(ii) வெற்று கூற்றுகள் மடக்கில் இட உணர்த்திகளை பயன்படுத்தல்

(iii) கணிப்பொறி நிரல் என்பது கட்டளைகளின் தொகுப்பாகாது.

(iv) C++ நிரலில் பல வகையான கூற்றுகள் பயன்படுத்தபடுகின்றன.

அ. i- தவறு, ii- சரி, iii- தவறு, iv- சரி
ஆ. i- சரி, ii- தவறு, iii- சரி, iv- தவறு
இ. i- சரி, ii- சரி, iii- தவறு, iv- தவறு
ஈ. i- தவறு, ii- தவறு, iii- சரி, iv- சரி

**[விடை. இ. i- சரி, ii- சரி, iii- தவறு, iv- தவறு]**

**பொருத்துக.**

**1.** (i) தொடக்க மதிப்பிருத்தும் கோவை – (1) தவறு என்றால் மடக்கை விட்டு வெளியேறும்

(ii) பரிசோதிப்பு நிபந்தனை கோவை – (2) மாறியின் மதிப்பை மாற்றும் செய்யும்

(iii) புதுபித்தல் கோவை – (3) கட்டளைத் தொகுதியை குறிக்கும்

(iv) மடக்கின் உடற்பகுதி – (4) ஒரே ஒருமுறை தான் செயல்படுத்தப்படும்

அ. 3,4,1,2 ஆ. 4,1,2,3
இ. 4,2,1,3 ஈ. 4,3,1,2

**[விடை. ஆ. 4,1,2,3]**

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



## குறு வினாக்கள். (2 மதிப்பெண்கள்)

**1. கட்டுப்பாடு கூற்றுகள் என்றால் என்ன?**

பாய்வுக் கட்டுப்பாடு நிரலின் ஒரு தொகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு தாவச் செய்கிறது. அத்தகைய தாவலுக்கு காரணமான நிரல் கூற்றுகள் கட்டுப்பாடு கூற்றுகள் எனப்படும்.

**2. கலவை கூற்றின் பொது வடிவத்தை எழுதுக.**

கலவை கூற்றின் பொது வடிவம்

```
{
    கூற்று 1 ;
    கூற்று 2;
    கூற்று 3;
}
```

**3. ஒரு நிரலில் உள்ள கூற்றுகள் எவ்வாறு இயக்கப்படுகிறது?**

ஒரு நிரலிலுள்ள கூற்றுகள், வரிசைமுறை, தேர்ந்தெடுப்பு மற்றும் மடக்கு போன்ற கட்டுப்பாட்டு கூற்றுகளாக இயக்கப்படுகிறது.

**4. கட்டளையமைப்பை எழுதுக.**

```
if (நிபந்தனை கோவை)
மெய் தொகுதி;
x- கூற்று
```

**5. If கூற்றில் எப்போது நெளிவு அடைப்புக்குறிக்குள் தரப்படவேண்டும்?**

if நிபந்தனைக் கூற்று, ஒன்றுக்கும் மேற்பட்ட நிரல் கூற்றுகளை இயக்க வேண்டுமெனில் அந்நிரல் கூற்றுகள் அனைத்தும் நெளிவு அடைப்புக் குறிக்குள் தரப்பட வேண்டும்.

**6. If-else கூற்றின் கட்டளையமைப்பை எழுதுக.**

```
if (கோவை)
{
    மெய் தொகுதி;
}
else
{
    மெய்யற்ற தொகுதி;
}
x-கூற்று
```

**7. ஒரு If கூற்றுக்கு உள்ளே மற்றொரு if கூற்றை அமைத்தல் வடிவத்தின் கட்டளையமைப்பை எழுதுக.**

```
if (கோவை–1)
{
    if (கோவை–2)
{
    மெய் பகுதி கூற்றுகள்;
}
else
{
    மெய்யற்ற பகுதி கூற்றுகள் ;
    }
}
else
else–பகுதியின் உடற்பகுதி;
```

**8. ஒரு if கூற்றின் else கூற்றுக்குள் மற்றொரு if கூற்றை அமைத்தல் வடிவத்தின் கட்டளையமைப்பை எழுதுக.**

```
if (கோவை–1)
{
    மெய் பகுதியின் உடற்பகுதி;
}
else
{
    if (கோவை–2)
  {
    மெய் பகுதி கூற்றுகள்;
  }
        else
  {
    மெய்யற்ற பகுதி கூற்றுகள்;
        }
}
```

**9. கொடுக்கப்பட்ட இரண்டு எண்களில் எது பெரியது என கண்டறிய நிபந்தனை செயற்குறியை பயன்படுத்தி ஒரு நிரல் எழுதுக.**

```
#include <iostream>
using namespace std;
int main()
{
        int a, b, largest;
        cout << "\n Enter any two numbers: ";
        cin >> a >> b;
        largest = (a>b)? a : b;
        cout << "\n Largest number : " << largest;
        return 0;
}
```

**10. மடக்கு என்றால் என்ன? அவற்றின் பயனை எழுதுக.**

பன்முறைச் செயல் அல்லது மடக்கு என்பது ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கூற்றுகள், நிபந்தனை நிறைவேறும் வரை திரும்பத் திரும்ப இயக்கப்படுவதை குறிக்கும். இந்த கூற்றுகளை பாய்வுக் கட்டுப்பாட்டு கூற்றுகள் எனவும் கூறலாம். இது நிரலின் நீளத்தை குறைக்கவும், நேரத்தை குறைக்கவும், நிரல் இயக்கவும், குறைவான நினைவக இடத்தை எடுத்துக் கொள்ளவும் பயன்படுகிறது.

order@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



**11. பரிசோதிப்பு நிபந்தனை பற்றி சிறு குறிப்பு வரைக.**

ஒரு மடக்கில் உள் நுழைய அல்லது வெளியேற காரணமான நிபந்தனையை வெளியேறல் நிபந்தனை அல்லது பரிசோதிப்பு நிபந்தனை என்கிறோம்.

**12. while மடக்கை பயன்படுத்தி 5 எண்களை உள்ளீடாகப் பெற்று அவற்றின் கூட்டுத் தொகை மற்றும் சராசரியை காணும் C++ நிரலை எழுதுக.**

```
#include <iostream>
using namespace std;
int main ()
{
    int i=1, num, avg, sum=0;
    while (i <= 5)
{
     cout<<"Enter the number : ";
     cin>>num;
     sum=sum+num;
     i++;
}
    avg=sum/50;
    cout<<"The sum is "<<sum<<endl;
    cout<<"The average is "<<avg;
    return 0;
}
```

**13. do-while மடக்கினைப் பயன்படுத்தி 10 முதல் 1 வரை உள்ள எண்களை வெளியிடும் நிரலை எழுதுக.**

```
#include <iostream>
using namespace std;
int main ()
{
    int n = 10;
    do
{
     cout<<n<<", ";
     n--;
    }while (n>0) ;
    }
```

**வெளியீடு:** 10, 9, 8, 7, 6, 5, 4, 3, 2, 1

**14. C++ -ல் உள்ள break, continue கூற்றுகள் பற்றி குறிப்பு எழுதுக.**

break கூற்று ஒரு தாவுதல் கூற்று கட்டுப்பாட்டை மடக்கினை விட்டு வெளியேற செய்யும், மேலும் மடக்கினுள் உடற்பகுதிக்கு அடுத்துள்ள கூற்றுகளை இயங்கச் செய்யும்.

continue கூற்று break கூற்றைப்போல் செயல்படுகிறது. ஆனால், மடக்கை முடித்து வைப்பதற்கு பதிலாக, மடக்கை அடுத்து சுழற்சிக்கு இட்டுச்செல்லும். ஓர் மடக்கினுள் Continue கூற்று இயக்கப்படும் பொழுது, continue கூற்றை தொடர்ந்து வரும் கூற்றுகள் தவிர்க்கப்பட்டு, மடக்கின் அடுத்த சுழற்சியை தொடங்க செய்யும்.

## சிறு வினாக்கள். (3 மதிப்பெண்கள்)

**1. பின்னலான if கூற்று என்றால் என்ன? அவற்றின் மூன்று வடிவங்களை எழுதுக.**

ஒரு if கூற்று, மற்றொரு if கூற்றை கொண்டிருந்தால் அது பின்னலான if கூற்று என்று அழைக்கப்படுகிறது. பின்னலான if கூற்றுகள், பின்வரும் மூன்று வடிவங்களில் அமைக்கப்படும். அவையாவன

(i) ஒரு if கூற்றுக்கு உள்ளே மற்றொரு if கூற்றை அமைத்தல்

(ii) ஒரு if கூற்றின் else கூற்றுக்குள் மற்றொரு if கூற்றை அமைத்தல்

(iii) ஒரு if கூற்றுக்கு உள்ளே ஒரு if கூற்றும், else கூற்றுக்கு உள்ளே மற்றொரு if கூற்றும் அமைத்தல்.

**2. கொடுக்கப்பட்ட எண் ஒற்றைப் படை அல்லது இரட்டைப்படை எண்ணா எனக் காணும் C++ நிரலை எழுதுக.**

```
#include <iostream>
using namespace std;
int main()
{
int num, rem;
cout<< "\n Enter a number: ";
cin>>num;
rem = num % 2;
if (rem==0)
cout<< "\n The given number" <<num<< " is Even";
else
cout<< "\n The given number "<<num<< " is Odd";
return 0;
}
```

**3. பரிசோதிப்பு நிபந்தனை கோவையின் வகைகளை எழுதுக.**

பரிசோதிப்பு நிபந்தனை கோவையின் சோதிப்பு நிலையை அடிப்படையாகக் கொண்டு, மடக்குகளை நுழைவு சோதிப்பு மடக்கு மற்றும் வெளியேறல் சோதிப்பு மடக்கு என இரண்டு வகையாக பிரிக்கப்படுகிறது.

நுழைவு சோதிப்பு மடக்கில், நிபந்தனை கோவை மடக்கினுள் நுழையும் முன் சோதிக்கப்படுகிறது. அவ்வாறின்றி வெளியேறல் சோதிப்பு மடக்கில் நிபந்தனைக் கோவை மடக்கினை விட்டு வெளியேறும் முன்பாக சோதிக்கப்படுகிறது.

order@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in
This is Only for Sample for Full Book Order Online or Available at All Leading Bookstores



**4. goto கூற்று பற்றி சிறுகுறிப்பு வரைக.**

goto கூற்று நிபந்தனையில்லா கட்டுப்பாட்டு கூற்றாகும். இது நிரலில் ஒரு கூற்றிலிருந்து மற்றொரு கூற்றிற்கு எந்த வித நிபந்தனையும் இன்றி தாவச் செய்யும்.

| கட்டளை அமைப்பு 1 | கட்டளை அமைப்பு 2 |
|---|---|
| goto label;<br>-------------<br>-------------<br>-------------<br>label: | label:<br>------------<br>------------<br>------------<br>goto label; |




**5. switch கூற்றினைப் பற்றி தெரிந்துக் கொள்ள வேண்டிய முக்கிய குறிப்புகள் யாவை?**

switch கூற்றினைப் பற்றி தெரிந்துக் கொள்ள வேண்டிய சில முக்கிய குறிப்புகள்:

(i) switch கூற்று, தரத்தை ஒப்பிடுதலுக்கான பணிக்கு மட்டுமே பயன்படுகிறது .

(ii) switch கூற்றில் இரு வெவ்வேறு case கூற்றுகளுக்கு ஒரே மதிப்புகள் இருக்கக் கூடாது.

(iii) switch கூற்றில் குறியுறு மாறிலிகள் பயன்படுத்தப்பட்டால், அவை தாமாகவே ASCII குறியீட்டின் சமமான மதிப்பிற்கு மாறிக் கொள்ளும்.

(iv) பல தேர்வுகளிலிருந்து ஒன்றை தேர்வு செய்ய வேண்டிய சூழ்நிலையில், switch கூற்று மிகவும் பொருத்தமான தேர்வு.

**6. வேறுபடுத்துக break கூற்று மற்றும் continue கூற்று.**

break மற்றும் continue ஒப்பீடு

| break | continue |
|---|---|
| break மடக்கினை விட்டு வெளியேற செய்யும். | continue கூற்று மடக்கை விட்டு வெளியேற செய்யாது. |
| இது சுழற்சியை முடித்து வைக்கும். | இது சுழற்சியை தவிர்க்கச் செய்யும். |
| இந்த கூற்றை இயக்கப்படும் பொழுது கட்டுப்பாட்டை மடக்கினை விட்டு வெளியேறி மடக்கிற்கு அடுத்து வரும் கூற்றுகளை இயக்கும். | இந்த கூற்று இயக்கப்படும் பொழுது மடக்கைவிட்டு வெளியேறாமல் மடக்கின் அடுத்த சுழற்சிக்கு தாவச் செய்யும். |
| break கூற்று மடக்கு மற்றும் switch கூற்றுடன் பயன்படுத்தலாம். | continue கூற்று மடக்கில் மட்டுமே பயன்படுத்தப்படும், switch கூற்றுடன் பயன்படுத்தப்படாது. |

**7. 1 முதல் 10 வரை உள்ள எண்களின் தொடர் கூட்டலை வெளியிடும் நிரலை எழுதுக.**

```
#include<iostream>
using namespace std;
int main()
{
    int i,sum=0;
    for(i=1; i<=10;i++)
    {
    sum=sum+i;
    }
    cout<<"The sum of 1 to 10 is "<<sum;
    return 0;
}
```

**வெளியீடு :**

The sum of 1 to 10 is 55

## நெடுவினாக்கள். (5 மதிப்பெண்கள்)

**1. பின்னலான if கூற்று என்றால் என்ன? அவற்றின் மூன்று வடிவங்களின் கட்டளையமைப்பை எழுதுக.**

ஒரு if கூற்று, மற்றொரு if கூற்றை கொண்டிருந்தால் அது பின்னலான if கூற்று என்று அழைக்கப்படுகிறது. பின்னலான if கூற்றுகள், பின்வரும் மூன்று வடிவங்களில் அமைக்கப்படும். அவையாவன

(i) ஒரு if கூற்றுக்கு உள்ளே மற்றொரு if கூற்றை அமைத்தல்

(ii) ஒரு if கூற்றின் else கூற்றுக்குள் மற்றொரு if கூற்றை அமைத்தல்

(iii) ஒரு if கூற்றுக்கு உள்ளே ஒரு if கூற்றும், else கூற்றுக்கு உள்ளே மற்றொரு if கூற்றும் அமைத்தல்.

இந்த மூன்று வடிவங்களின் கட்டளை அமைப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

order@surabooks.com Ph:9600175757 / 8124301000
Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com